**IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT AND SESSIONS JUDGE, SALEM.**

**S.C.No.88/2015**

Date: 02. 01.2025.

PW– 15 – மணிமாறன்

A4 present. A1, A2 produced on PT warrant. A5 died. A3, A6 called absent. Petition u.sec.317 Cr.PC., filed and allowed.

சாட்சி இன்று மீண்டும் மனுவின் பேரில் திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி

பிரேதபரிசோதனை முடிந்த பின்பு இறந்துபோனவரின் உறவினரான ராஜாத்தி இந்த சம்பவத்தின்போது காயம்பட்டிருந்ததால் பிரேதத்தை ராஜாத்தி சுயநினைவுக்கு வந்தவுடன் ஒப்படைக்கலாம் என்று உறவினர்கள் கூறியதால் பிரேதத்தை பிரேபரிசோதனை முடிந்து 3 நாட்கள் சவக்கிடங்கில் வைப்பதற்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பிரேதம் சவக்கிடங்கில் வைக்கப்பட்டது. ராஜாத்தி சுயநினைவிற்கு வரதா காரணத்தினால் அவரது உறவினாரான பழனிவேல் என்பவரிடம் 21.10.2013 அன்று பிரேதம் ஒப்படைக்கப்பட்டது. 24.10.2013 அன்று இந்த வழக்கின் சாட்சிகள் அண்ணாதுரை, மணி, அஞ்சலி ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 25.10.2013 அன்று வழக்கில் காயம் அடைந்த ராஜாத்தி அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

30.10.2013 அன்று கிடைத்தத ரகசிய தகவல்படி 22.30 மணிக்கு வழக்கின் எதிரி கண்ணன் என்பவரை சின்னதிருப்பதி, சின்னமுனியப்பன்கோவில் அருகில் வைத்து கைது செய்தேன். எதிரி தானாக முன்வந்து எந்வித அச்சுறுத்தலும் இன்றி ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தை கிடைக்கப்பெற்ற சாட்சிகளான கிராமநிர்வாக அலுவலர் சிவா மற்றும் கிராம உதவியாளர் மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் 22.30 மணி முதல் 22.45 மணி வரை மேற்படி கைது செய்யப்பட்ட இடத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அவர் என்னை அழைத்து சென்றால் நான் சம்பவத்திற்கு பயன்படுத்திய ரத்தகரை படிந்த உருட்டுகட்டையையும், சம்பவத்தின்போது கொள்ளையடித்த பஜாஜ்பல்சர் TN30J8010 என்ற இருசக்கர வாகனத்தை எடுத்து ஆஜர்

செய்வதாக கூறினார். உருட்டு கட்டையை அஸ்தம்பட்டி JJ gateway பிளாட் அருகில் உள்ள புதரில் இருந்து எடுத்து தருவதாகவும், இருசக்கர வாகனத்தை ஈரோடு மாவட்டம், பெருந்துறை சரளை என்ற இடத்தில் மறைத்து வைத்திருப்பதை எடுத்து தருவதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. 31.10.2013 அன்று 1.00 மணி அளவில் மேற்படி எதிரியை அஸ்தம்பட்டி JJ gateway பிளாட் முட்புதர் அருகே அழைத்து சென்று அவர் அடையாளம் காண்பித்து எடுத்து கொடுத்த சம்பவத்திற்கு பயன்படுத்திய ரத்தகரை படிந்த உருட்டு கட்டையை மஜரில் கைப்பற்றினேன். சாட்சிகள் உமா, மற்றும் மாணிக்கம் முன்னிலையில் உருட்டு கட்டையை கைப்பற்றினேன்.

பிறகு ஈரோடு மாவட்டம், பெருந்துறை சரளை சென்று சிப்காட் செல்லும் வழியில் ஆள்நடமாட்டம் இல்லாத இடத்தில் ஒரு முட்புதர் அருகே எதிரி மறைத்து வைத்திருந்த சம்பவத்தில் கொள்ளையடித்த பஜாஜ்பல்சர் TN30J8010 என்ற வாகனத்தை எதிரி எடுத்து ஆஜர் செய்தார். சாட்சிகள் சிவா மற்றும் மாணிக்கம் முன்னிலையில் மஜரில் இருசக்கர வாகனத்தை கைப்பற்றினேன். பிறகு 9.00 மணிக்கு புறப்பட்டு கன்னங்குறிச்சி காவல் நிலையம் வந்தேன். எதிரியை பாராகாவல் வசம் ஒப்படைத்தேன். அன்றைய தினமே கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் போலிஸ் சகிதம் கன்னங்குறிச்சி புது ஏரிக்கரை அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரி தீனதயாளன் என்பரை கைது செய்தேன். எதிரி தானாக முன்வந்து எவ்வித அச்சுறுத்தலும் இன்றி கொடுத்த ஒப்புல் வாக்குமுலத்தை சாட்சிகள் சிவா மற்றும் மாணிக்கம் முன்னிலையில் பதிவு செய்தேன். அதில் என்னை அழைத்து சென்றால் தனது ஓட்டு வீட்டில் இருக்கும் பின்புற தண்டையில் இருந்து சம்பவத்தில் கொள்ளையடித்த ரூபாய்.,26,000/– பணத்தையும், சம்பவத்திற்கு பயன்படுத்திய மரப்பலகையும் எடுத்து ஆஜர் செய்வதாக சொன்னார்.

அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிறகு அன்றைய தினமே 11.30 மணி அளவில் எதிரி தீனதயாளனை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றேன். அவர் எடுத்து ஆஜர் செய்த பணம் ரூ.26,000/– மற்றும் ரத்தகரை படிந்த செவ்வக மரபலகை ஒன்றையும் சாட்சிகள்

சிவா மற்றும் மாணிக்கம் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். அந்த செவ்வக வடிவ மரக்கட்டை சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பணம் ரூ.26,000/– ஏற்கனவே சா.பொ.17 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிறகு எதிரியை நிலையம் கொண்டு வந்து பாராகாவல்வசம் ஒப்படைத்தேன். அன்றைய தினமே கிடைத்த ரகசிய தகவலின் படி கன்னங்குறிச்சி ராமநாதபுரம் பஸ்ஸ்டாப் அருகில் வைத்து இவ்வழக்கின் எதிரி பிளேடு செல்வம்(எ) பன்னீர் செல்வத்தை 13.00 மணிக்கு கைது செய்தேன்.

பிறகு அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் சிவா மற்றும் மாணிக்கம் முன்னிலையில் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி அவர் சம்பவத்திற்கு பயன்படுத்திய இரும்பு ராடு மற்றும் சம்பவத்தின்போது அணிந்திருந்த ரத்தகரை படிந்த போண்ட், சட்டையை எடுத்து ஆஜர் படுத்துவதாக சொன்னார். சாந்தி நகர் பிளாட் அருகிலுள்ள புதரில் இருந்து ஆஜர் படுத்துவதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி ஏற்கனவே அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 15.00 மணிக்கு எதிரியை சாந்திநகர் பிளாட்டிற்கு அழைத்து சென்றேன். அ ருகில் இருந்த புதரில் இருந்து எதிரி அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்த இரும்பு ராடு ஒன்றையும், ரத்தகரை படிந்த வெள்ளைநிற முழுகைசட்டை மற்றும் ஜீன்ஸ்பேண்ட் ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றினேன். இரும்பு ராடு சா.பொ.6 ஆகவும், முழுக்கை சட்டை சா.பொ.27 ஆகவும், ஜீன்ஸ்பேண்ட் சா.பொ.28 ஆகவும் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது.

அன்றைய தினமே 16.30 மணிக்கு எதிரி மற்றும் சொத்துக்களுடன் நிலையம் வந்து பாராவசம் எதிரியை ஒப்படைத்தேன். அன்றைய தினமே 17.30 மணிக்கு இவ்வழக்கின் சட்டபிரிவு 307 மற்றும் 302 இ.த.ச.வின் இருந்து பிரிவுகள் 457, 395, 396, 397 மற்றும் 302 இ.த.ச ஆக மாற்றம் செய்து சட்டமாறுதல் அறிக்கையை நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த சட்டபிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.36. அன்றைய தினமே கைது செய்த எதிரிகள் 3 பேரையும் தக்கவழிகாவல் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

பிறகு எதிரிகள் 3 வரின் ஒப்புதல் வாக்குமூலங்களிலிருந்து இவ்வழக்கின் மற்றொரு எதிரியான மணிகண்டன் என்பவர் எடப்பாடி காவல்நிலைய குற்ற வழக்கில் சம்மந்தப்பட்டு ராசிபுரம் நீதிமன்றநடுவர் நீதிமன்றத்தில் சரணடைந்து சேலம் மத்திய சிறையில் இருப்பது பற்றி தகவல் தெரிந்தது. அதன் அடிப்படையில் 13.11.2013 அன்று நீதிமன்ற உத்தரவு பெற்று சேலம் மத்திய சிறையில் இருந்த எதிரி மணிகண்டனை சம்பிர்தாய கைது செய்து பிறகு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். 14.11.2013 அன்று இவ்வழக்கில் இறந்துபோன ராமகிருஷ்ணன் மற்றும் ராஜசேகரன் ஆகியோர் உடலின் மீது பிரேதபரிசோதனை செய்த மருத்துவர் பன்னீர் செல்வம் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடம் இருந்து பிரேதபரிசோதனை அறிக்கைகள் பெற்றேன். 15.11.2013 அன்று வழக்கு சம்பவத்தில் காயம்பெற்ற ராஜாத்தி என்பவரை விசாரணை செய்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன்.

19.11.2013 அன்று நடுவர் நீதிமன்ற எண்.4, சேலம் எதிரி மணிகண்டன் என்பவரை போலிஸ் காவலில் எடுக்க மனு தாக்கல் செய்தேன். அதன்படி 2 நாட்கள் போலிஸ் காவலில் வைக்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. அதன்படி எதிரி மணிகண்டனை போலிஸ் காவலில் எடுத்து விசாரித்தேன். அவர் சாட்சிகள் மாணிக்கம், சிவா ஆகியோர் முன்னிலையில் எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார். அதை நான் பதிவு செய்தேன். ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை தனது வீட்டிற்கு அழைத்து சென்றால் அங்கு சம்பவத்திற்கு பயன்படுத்திய டி,வி.எஸ் 50 பதிவு எண்.டீஏஎம்–9355 மற்றும் வளைவு கத்தி, எடப்பாடி செல்வம் பயன்படுத்திய வீச்சருவாள் ஆகியவற்றை எடுத்து ஆஜர் படுத்துவதாக சொன்னார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் திருப்பூர் அழைத்து சென்றால் சம்பவ இடத்தில் கொள்ளையடித்த நகைகளை அங்கு அடகு வைத்திருக்கும் நகையை எடுத்து ஆஜர் படுத்துவதாக சொன்னார். அதன்படி இவ்வழக்கின் எதிரி மணிகண்டனை அவரது வீடான பெரியகொல்லப்பட்டி அருகிலுள்ள வீட்டிற்கு 20.11.2013 அன்று காலை 7.00 மணிக்கு அழைத்து சென்றேன். அங்கு அவர் அடையாளம் காண்பித்து எடுத்து ஆஜர் செய்த

இருசக்கர வாகனம் டி,வி.எஸ் 50 பதிவு எண்.டீஏஎம்–9355 த்தையும், வளைவு கத்தி ஒன்றையும், சம்பவத்தில் எடப்பாடி செல்வம் பயன்படுத்திய வீச்சருவாள் ஒன்றையும் சாட்சிகள் சிவா மற்றும் மாணிக்கம் முன்னிலையில் மஜரில் கைப்பற்றினேன்.

பிறகு எதிரியுடன் திருப்பூர் சென்று எதிரி மணிகண்டன் அடையாளம் காட்டிய மணிமாரன் என்பவரிடமிருந்து சம்பவத்தில் கொள்ளையடிக்கப்பட்டு அடகு வைக்கப்பட்டிருந்த சுமார் 11 கிராம் எடையுள்ள தங்க செயின் ஒன்றையும், சுமார் முக்கால்பவுன் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றையும், சுமார் அரைபவுன் எடையுள்ள தங்க மோதிரம் ஒன்றையும், எடுத்து ஆஜர் செய்ய சாட்சிகள் சிவா மற்றும் மாணிக்கம் ஆகியோர் முன்னிலையில் 12.30 மணிக்கு மகஜரில் கைப்பற்றினேன். பின்னர் நிலையம் வந்து எதிரியை பாராவசம் ஒப்படைத்தேன். சாட்சிகள் சிவா மற்றும் மாணிக்கம் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

21.11.2013 அன்று எதிரி மணிகண்டனை போலிஸ் காவல் முடித்து நீதிமன்ற காவலுக்காக நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினேன். 22.11.2013 அன்று இந்த வழக்கு சம்பவத்தில் காயம் பெற்ற ராஜாத்தி என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவரிடம் இருந்து காயச்சான்றிதழ் பெற்றேன். பிரேத பரிசோததனையின் போது சேகரிக்கப்பட்ட உள்ளுருப்புகளை ரசாய பரிசோதனைக்கு அனுப்ப வேண்டுகேள் கடிதம் நீதிமன்றத்தில் கொடுத்தேன். அதன்அடிப்படையில் உள்ளுறுப்புகள் ரசாயனபரிசோதனைக்கு அனுப்பப்பட்டது.

பின்பு நான் பணி மாறுதலில் சென்றுவிட்டதால் எனக்கு பின்பு வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

20.11.2013 அன்று 12.30 மணிக்கு எதிரி மணிகண்டன் மூலம் திருப்பூரில் மணிமாரன் என்பரிடம் கைப்பற்றியதாக சொல்லும் கைப்பற்றுதல் மகஜரில் 3 வது அயிட்டம் மோதிரத்தில் எடையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். 2 வது அயிட்டம் மோதிரத்தில் எடை அரைபவுன் என்று மேற்படி மஜரில் குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் சரிதான். சுமார் அரைபவுன் என்று சொல்லியுள்ளேன். மணிமாரன் என்பவர் வீடு திருப்பூர் டவுனில் உள்ளதா அல்லது

கிராமத்தில் உள்ளதா என்று எனக்கு தற்போது நினைவில்லை. மணிகண்டன் நகைகளை எங்கிருந்து எடுத்துக்கொடுத்தார் என்ற விவரம் கைப்பற்றுதல் மகஜரில் குறிப்பிடப்படவில்லை என்றால் வீட்டின் முன்பு இருந்து எடுத்து ஆஜர் செய்ததாக சொல்லியுள்ளேன். அந்தமணிமாரன் ஓட்டு வீடா தார்சு வீடா என்று எனக்கு தற்போது நினைவில்லை. அந்த வீட்டில் எவ்வளவு பேர் குடியிருந்தார்கள் என்று எனக்கு தற்போது நினைவில்லை. அந்த வீடு மணிமாரனின் சொந்த வீடா வாடகை வீடா என்று என்னால் தற்போது சொல்லமுடியாது. மணிமாரன் வீட்டிற்கு வேறு வீடுகள் இருந்ததா என்றால் ஆமாம். மணிமாரன் வீட்டிற்கு அருகிலுள்ள நபர்களிடம் கைப்பற்றுதல் மகஜரில் நான் கையெழுத்து வாங்கவில்லை. அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லை. அந்த சமயத்தில் அங்கு யாரும் இல்லை என்று நான் வழக்கு ஆவணங்களில் குறிப்பிடவில்லை.

கன்னங்குறிச்சி காவல் நிலையத்திலிருந்து மணிமாரன் வீடு எவ்வளவு தூரத்தில் உள்ளது என்று என்னால் சொல்லமுடியாது. திருப்பூருக்கு நான் காவல்வாகனத்தில் சென்றேன். ஜீப்பில் தான் திருப்பூர் சென்றோம். என்னுடன் கன்னங்குறிச்சி காவல்நிலையத்திலிருந்து எத்தனை பேர் திருப்பூர் வந்தார்கள் என்று எனக்கு நினைவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ. 14 என் கைப்பட எழுதவில்லை. என்னுடன் வந்த காவலர் எழுதினார். அவர் யார் என்று என்னால் தற்போது எனக்கு நினைவில்லை.

எதிரி மணிகண்டனை விசாரித்தேன். அவரை விசாரணை செய்ய சுமார் 2 மணி நேரம் ஆனது. எதிரி மணிகண்டனை முதலில் விசாரணை செய்தபோது சாட்சிகள் சிவா மற்றும் மாணிக்கம் அங்கு இல்லை. தற்போது சாட்சி நான் முதலில் மணிகண்டனை விசாரித்தது சிறிது நேரம் தான் என்றும் அப்போது சாட்சிகள் அங்கு இல்லை என்று சொல்லுகிறார். அதன் பின்பு தான் சாட்சிகளை வரச்சொன்னேன். ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரி மணிகண்டனின் ஒப்புதல் வாக்குமூலத்தை நான் சொல்ல சொல்ல ஒரு காவலர் எழுதினார். ஒப்புதல் வாக்குமூலம் எழுத சுமார் 2 மணி நேரம் ஆனது. ஒப்புதல் வாக்குமூலத்தில் எழுதிய காவலர் ஒப்புதல் வாக்குமூலத்தில் கையெழுத்து போடவில்லை.

திருப்பூர் மணிமாரன் நகையை கைப்பற்றிய மகஜரில் கையெழுத்து போடவில்லை. இந்த வழக்கில் நான் முதலில் கைது செய்த எதிரி கண்ணன். எதிரி கண்ணனை நான் 19.11.2013 அன்று கைது செய்தேன்.

எதிரி கண்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரிகளின் பெயர்கள் எனக்கு தெரியவந்தது. கண்ணனின் வாக்குமூலத்தின் அடிப்படையில் மற்ற எதிரிகளை பிடிக்க காவலர்கள் நியமனம் செய்தேன். சட்டபிரிவு மாறுதல் அறிக்கையிலும் எதிரிகளின் பெயர்களை நான் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பிளேடு செல்வம்(எ) பன்னீர் செல்வத்திடமிருந்து ரத்தகரை படிந்த இரும்பு ராடு, ரத்தகரை படிந்த பேண்ட், சர்ட் ஒன்று என்று மஜரில் குறிப்பிட்டுள்ளேன். மகஜரில் புளூகலர் ஜீன்ஸ் பேண்ட் கைப்பற்றப்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது.

ரசாயனபகுப்பாய்விற்கு அனுப்பப்பட்ட பொருட்களில் புளூகலர் ஜீன்ஸ் பேண்ட் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான்.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

Sd/-L. Kalaivani,
III Additional District Judge,
Salem.